


இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று (13.02.2024) சென்னை கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற அரசு விழாவில் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் கீழ் இயங்கும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் சார்பில் வடசென்னை இளைஞர்கள், பழங்குடியின இளைஞர்கள், திருநங்கைகள், பெண்கள் மற்றும் அரசு விடுதி மாணவர்களுக்கு திறன் பயிற்சிகளை துவக்கி வைத்து, நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்போர்களுக்கான திறன் பயிற்சி சான்றிதழ்களை வழங்கி, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் குறுகிய கால திறன் பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கி, குழுப்புகைப்படம் எடுத்துக்கொண்டார். இந்நிகழ்ச்சியில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நலத்துறை மற்றும் உயர்கல்வித் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் திருமதி என். கயல்விழி செல்வராஜ், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், கலாநிதி வீராசாமி, சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அரசு செயலாளர் மரு. தாரேஸ் அகமது, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி. ஜெ. இன்னசென்ட் திவ்யா, மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

## ‘எல்லோருக்கும் எல்லாம்’ என்பதுதான் நம் ‘திராவிட மாடல்’ அரசின் தத்துவம்!

# காற்று போக முடியாத இடத்தில்கூட, ‘திராவிட மாடல்’ அரசின் திட்டங்கள் செல்லும்!

## ‘வட சென்னை வளர்ச்சித் திட்டத்தின்’ கீழ் - 1800 இளைஞர்களுக்கு திறன் பயிற்சியைத் தொடங்கி வைத்து - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

**சென்னை, பிப்.14–**

**சென்னை, கலைவாணர் அரங்கத்தில், நேற்று மாலை, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறையின் கீழ் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் சார்பாக வடசென்னை பகுதியில் உள்ள 1,800 இளைஞர்களுக்கு வட சென்னை வளர்ச்சித் திட்டத்தின் வாயிலாக திறன் பயிற்சி தொடக்க விழா நடைபெற்றது.**

**இதில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் சிறப்பு செயலாக்கத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அர்வள் கலந்துகொண்டு திறன் பயிற்சித் திட்டங்களைத் தொடங்கி வைத்து பயிற்சி பெற்றவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கி உரையாற்றினார்.**

**அப்போது அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், “எல்லோருக்கும் எல்லாம்” என்பதுதான் நம் ‘திராவிட மாடல்’ அரசின் தத்துவம் என்றும், “காற்று போக முடியாத இடத்தில் கூட, திராவிட மாடல் அரசின் திட்டங்கள் செல்லும்!” என்றும் குறிப்பிட்டார்.**

**அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:–**

“மேடையில் நான்கு அமைச்சர்கள் அமர்ந்திருக்கிறோம். ஆனால் யாரையும் பேசவிடாமல் நான் ஏன் பேசுகிறேன் என்று நீங்களெல்லாம் யோசித்துக் கொண்டிருப்பீர்கள். நான்கு அமைச்சர்களின் சார்பாகத்தான் நான் இங்கே பேச வந்திருக்கிறேன்.

தமிழ்நாடு அரசின் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையின் கீழ், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் சார்பாக, வடசென்னை பகுதியில் உள்ள 1,800 இளைஞர்களுக்கு வடசென்னை வளர்ச்சித் திட்டம் மூலம் திறன் பயிற்சி தொடக்கம், பழங்குடியின மாணவர்களுக்கான திறன் பயிற்சி முதற்கட்டமாக 200 நபர்களுக்கு வழங்கும் நிகழ்ச்சி, திருநங்கைகள் மற்றும் பெண்களுக்கான ஓட்டுநர்ப் பயிற்சியை முதற்கட்டமாக 100 பேருக்கு இங்கே தொடங்கி வைப்பது,

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத் தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அரசு விடுதி மாணவர்கள் 25 ஆயிரம் பேருக்கு ஆங்கிலப் பேச்சாற்றல் மற்றும் தனித் திறன் வளர்க்கும் பயிற்சி தொடக்கம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் வசிக்கின்ற 442 இளைஞர்களுக்குப் பயிற்சி பெற்றமைக்கான சான்றிதழ்கள் வழங்குதல், குறுகிய காலத் திறன் பயிற்சி பெற்ற 7 ஆயிரத்து 908 இளைஞர்களுக்குப் பணி நியமன ஆணைகள் வழங்குவது என 35 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பயனடைகின்ற இந்த நிகழ்ச்சியில் பங்கேற்பதில் நான் மிகுந்த பெருமை அடைகிறேன். மகிழ்ச்சி அடைகிறேன்.

### அரங்கம் நிறைய இளைஞர்கள்!

இதில் இன்னொரு கூடுதல் சிறப்பு என்னவென்றால், நீண்ட நாட்களுக்குப் பிறகு இந்த கலைவாணர் அரங்கத்தில் அரங்கம் நிறைந்த இளைஞர்கள் கூடி இருக்கிறோம். அதில் இன்னும் கூடுதல் மகிழ்ச்சி, சிறப்பு என்னவென்றால் ஆண்களை விடப் பெண்கள் அதிகமாக வந்திருக்கிறீர்கள். திருநங்கைகள் இருக்கிறார்கள். திருநம்பிகள் இருக்கிறார்கள். இதுதான் திராவிட மாடல் அரசு. இதுதான் திராவிட மாடல் ஆட்சி, இதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி. ‘எல்லோருக்கும் எல்லாம்’ என்பதுதான் நம் திராவிட மாடல் அரசின் தத்துவம். சமூகத்தில் உள்ள எந்தத் தரப்பையும் விட்டுவிடாமல், அவர்களுக்குத் தேவையான அனைத்துத் திட்டங்களையும் கொடுக்க வேண்டும் என்ற இலக்கோடுதான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள், நம் திராவிட மாடல் அரசு செயல்பட்டு வருகிறது. அதற்கு எடுத்துக்காட்டாகத் தான் இந்த நிகழ்ச்சி இவ்வளவு சிறப்பாக, எழுச்சியோடு, மகிழ்ச்சியோடு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்த விழாவின் வெற்றிக்குச் சாட்சி

இங்கு எங்கள் கண்களின் முன்னால் பயனாளிகளாக அமர்ந்திருக்கின்ற நீங்கள்தான் இந்த விழாவின் வெற்றிக்குச் சாட்சி. முன்பெல்லாம் திறன் பயிற்சி வேலைவாய்ப்பு முகாம்கள் எல்லாம் பெருநகரங்களின் தனியார் கல்லூரிகளில் நடக்கும். அந்த மாணவர்களுக்கு மட்டுமே அந்த வசதி இருந்தது.

ஆனால், இன்றைக்கு இங்கே பழங்குடியினப் பிரிவைச் சேர்ந்த இளைஞர்கள், பெண்கள், திருநங்கைகள், நகர்ப்புற வாழ்விடக் குடியிருப்பைச் சேர்ந்தவர்கள், அரசு விடுதிகளில் தங்கிப் படிப்போர் எல்லாம் வந்திருக்கிறீர்கள். காற்றுப் போக முடியாத இடத்தில்கூட நம் திராவிட மாடல் அரசின் திட்டங்கள் செல்லும் என்கிற அளவுக்கு தமிழ்நாட்டின் ஒவ்வொரு தனிமனிதருக்கும் தேவையான திட்டங்களை நம் முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகின்றார்.

ஒரு காலத்தில் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட சமூகங்களைச் சேர்ந்தவர்கள் படிக்கக் கூடாது என்று சொன்னார்கள். அதை உடைத்தது யார் என்றால் நீதி கட்சியின் ஆட்சி. அதுதான் பள்ளிக் கூடங்களை அதிக அளவில் திறந்தது. நீதிக்கட்சியின் பரிணாம வளர்ச்சிதான் திராவிட முன்னேற்றக் கழகம், நம்முடைய ஆட்சி. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் தமிழ்நாட்டில் மூன்று கிலோமீட்டருக்கு ஒரு பள்ளிக்கூடம் இருக்க வேண்டும் என்ற திட்டத்தைச் செயல்படுத்தினார்.

### கல்லூரி – பல்கலைக்கழகங்கள் திறக்கப்பட்டன!

அந்தத் திட்டத்தின் மூலம் குக்கிராமங்களில் உள்ள பிள்ளைகளுக்கு எல்லாம் கல்வி வசதி கிடைத்தது. மேலும் அதே முத்தமிழறிஞர் கலைஞரின் ஆட்சி காலத்தில்தான் நிறைய கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் திறக்கப்பட்டன. ‘புரொபஷனல் கோர்ஸ்’ என்று சொல்லப்படுகின்ற தொழிற்கல்விக்காக இன்ஜினியரிங் கல்லூரிகள்,



மெடிக்கல் கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டன.

கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் ஏராளமாக கலைஞரின் ஆட்சியில்தான் தொடங்கப்பட்டன. அதனால், உயர்கல்வி பெற்றவர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக உயர்ந்தது. அதற்கடுத்து உயர்கல்வி பெற்ற பட்டதாரி இளைஞர்கள் அனைவருக்கும் வேலைவாய்ப்பு கிடைக்க வேண்டும் என்று அந்தப் பொறுப்பையும் தமிழ்நாடு அரசு ஏற்றுக் கொண்டது.

முத்தமிழறிஞர் கலைஞரின் ஆட்சியில்தான் வேலை வாய்ப்புக்கான விதை போடப்பட்டது. இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பக் கொள்கை (ஐ.டி.பாலிசி) எங்கே ஆரம்பித்தது என்றால், அது நம் தமிழ்நாட்டில் மட்டும்தான். அதை ஆரம்பித்து வைத்தது இந்தியாவுக்கே எடுத்துக்காட்டாக இருந்தது முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் ஆட்சிதான்.

1997ஆம் ஆண்டு கலைஞர் அவர்கள் ஐ.டி பாலிசியை இந்தியாவிலேயே முதல் முறை அறிமுகப்படுத்தினார். டைடல் பார்க், சிப்காட், ஆட்டோமொபைல் தொழில் பூங்கா போன்றவற்றின் மூலம் பெரும் நிறுவனங்கள் வருவதற்கும், வேலைவாய்ப்புகள் கிடைப்பதற்கும் கலைஞர் அவர்கள்தான் வழிசெய்தார்கள். அதன் தொடர்ச்சியாகத்தான் நம் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் தலைமையில், நடைபெறுகின்ற இந்த திராவிட மாடல் அரசு, அதிக அளவில் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்து வேலைவாய்ப்புகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறது.

### மாறும் தொழில்நுட்பங்களுக்கு ஏற்ப திறன்கள் தேவை!

சமீபத்தில், நடைபெற்ற (குளோபல் இன்வெஸ்டர்ஸ் மீட்) உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில்கூட 6 லட்சத்து 64 ஆயிரம் அளவுக்கு முதலீடுகளை நம் அரசு ஈர்த்துள்ளது. இப்போது பட்டதாரி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க வேண்டும் என்றால், மாறி வருகின்ற தொழில்நுட்பங்களுக்கும் உலகச் சூழலுக்கும் ஏற்ப பல்வேறு திறன்கள் நமக்குத் தேவைப்படுகின்றன.

அந்த வகையில்தான் இளைஞர்களின் திறன்களை மேம்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் நமது முதலமைச்சர் அவர்கள் `நான் முதல்வன் திட்டம்’ என்று ஒரு சிறப்பான திட்டத்தை இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கி வைத்தார்.

இரண்டு ஆண்டுகளில் இன்று வரை கிட்டத்தட்ட 28 லட்சம் மாணவர்கள், ‘நான் முதல்வன்’ திட்டத்தின் மூலம் பயன்பெற்றுள்ளார்கள். அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துகள்.

இந்த அரசின் மிக, மிக முக்கியமான சாதனைகளில் இதுவும் ஒன்று. இத்தனை பேரின் கல்வித் தரத்தின் நிலையை அந்தத் திட்டத்தின் மூலம் ஒரு படி உயர்த்தி இருக்கிறோம் என்றால், அதற்குக் காரணம் பயிற்சி கொடுத்தவர்கள், பயிற்சி எடுத்தவர்கள் அனைவரையும் நான் மனதார பாராட்டுகிறேன்.

‘நான் முதல்வன்’ திட்டத்தின் மூலம் வேலைவாய்ப்பைப் பெருக்க எண்ணற்ற முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். ‘நான் முதல்வன்’ இணையதளம், திறன் பயிற்சி மற்றும் வேலை வாய்ப்புகள் தொடர்பான வழிகாட்டல்களை வழங்கும் செயற்கை நுண்ணறிவு சார்ந்த சேட்பாட் அழைப்பு மையத் திட்டமும் செயல்படுத்தப் பட்டுள்ளது. இந்த இணையதளம் மூலம் மட்டும், இதுவரை 15 ஆயிரத்து 105 இளைஞர்கள் பயன் பெற்றிருக்கிறார்கள்.

இன்றைக்கு இந்த நிகழ்ச்சியின் மூலம் பயன் பெற்றோரை நீங்கள் உன்னிப்பாகக் கவனித்தீர்கள் என்றால், ஒரு விஷயம் புரியும். காலம், காலமாக குறிப்பிட்ட ஒரு சிலர் மட்டும்தான் படிக்க முடியும். தங்களுக்கு மட்டும்தான் திறன்கள், ஆற்றல்கள் இருக்கிறது என்று நம்மிடம் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

### முதல் தலைமுறை!

இனிமேல் அப்படிச் சொல்ல முடியாது. எந்த ஒருவருக்கும், எந்த ஒரு பிள்ளைக்கும் திறமை என்பது பிறப்பின் அடிப்படையில் வருவது கிடையாது. அந்தத் திறமையைச் சொல்லித் தர சரியான வாய்ப்பிருந்தால், யார் வேண்டுமானாலும் வாழ்க்கையில் சாதிக்கலாம் என்பதற்கு எடுத்துக் காட்டுத்தான் இன்றைக்கு, இங்கு நடக்கக்கூடிய சிறப்பான நிகழ்ச்சி.

`அந்த வாய்ப்பை நாங்கள் உருவாக்கி தருகிறோம்’என்று திராவிட மாடல் அரசின் நம் முதலமைச்சர் அவர்கள் பல திட்டங்களை உருவாக்கித் தருகிறார். இதன் மூலம் ஏழை, எளிய வீட்டுப் பிள்ளைகள், கிராமப்புற மாணவர்கள், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஆதிதிராவிடர் வீட்டுப் பிள்ளைகள் இன்றைக்கு முதல் தலைமுறையாகப் பல்வேறு இடங்களில் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறீர்கள். உங்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகள்.

சமூகத்தில் ஒடுக்கப்பட்ட பெண்கள், திருநங்கையர்கள் இன்றைக்குத் திறன் பயிற்சியைப் பெற்றிருக்கிறீர்கள். எல்லா இடங்களில் வசிப்போருக்கும் சம வாய்ப்பு வேண்டுமென்பதால் வட சென்னை பகுதியைச் சேர்ந்தோருக்கும் திறன் பயிற்ச்சியை நம் அரசு கொடுக்கிறது. இதையெல்லாம் நீங்கள் சரியாகப் பயன்படுத்தி வாழ்வில் சிறக்க வேண்டும்.

### பணி நியமன ஆணை!

திறன் பயிற்சி சான்றிதழ்கள் பெற்றுள்ளோர், திறன் பயிற்சி பெற உள்ளோர் அனைவருக்கும் இந்த அரசின் சார்பாக முதலமைச்சரின் சார்பாக எங்களின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்றைக்குப் பணி வாய்ப்பைப் பெற்றுள்ள நீங்கள் ஒவ்வொருவரும் நாளை குறைந்தது 50 பேருக்கு அல்லது 100 பேருக்குப் பணி வாய்ப்புகளை நீங்கள் பெற உதவி செய்ய வேண்டும். அந்த அளவுக்கு உங்களுடைய திறனை நீங்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

இந்த அரசின் திட்டங்களையெல்லாம் நீங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நீங்கள் ஒவ்வொருவரும் இந்த அரசின் பிராண்ட் அம்பாசிடர்கள் தூதுவர்கள், நம் முதலமைச்சரின் முகமாக நீங்கள் ஒவ்வொருவரும் செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டு இந்தச் சிறப்பான நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்த துறை அதிகாரிகளுக்கும், வந்திருக்கக்கூடிய அனைத்து மாணவச் செல்வங்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளைக் கூறிக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி வணக்கம்.”

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் உயர்கல்வித் துறையின் அமைச்சருமான ஆர்.எஸ். ராஜ கண்ணப்பன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்ரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ், சென்னை மாநகராட்சி மேயர் பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையின் செயலாளர் தாரேஸ் அகமத், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழக மேலாண்மை இயக்குநர் இன்னொசன்ட் திவ்யா உட்பட பலரும் கலந்துகொண்டனர்.



விருகம்பாக்கம் 128–வது வார்டு இளங்கோ நகரில் மாமன்ற உறுப்பினர் ரத்னா லோகேஷ் தலைமையில் ரூ. 65 லட்சம் மதிப்பில் பல்நோக்கு கட்டிடத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கப்பாண்டியன் அடிக்கல் நாட்டினார். கழக நிர்வாகிகள் உடனுள்ளனர்.

## மாமன்ற உறுப்பினர் ரத்னா லோகேஷ் தலைமையில்

# 128-வது வார்டில் பல்நோக்குக் கட்டடம்!

## தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. அடிக்கல் நாட்டினார்!

சென்னை,பிப்.14-

விருகம்பாக்கம் 128வது வார்டு, இளங்கோ நகரில் தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் ரூ. 65.00 இலட்சத்தில் பல்நோக்கு கட்டிடம் அடிக்கல் நாட்டு விழா மாமன்ற உறுப்பினர் ரத்னா லோகேஷ் தலைமையில் நடைபெற்றது.

தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் நேற்று 13.02.2024 விருகம்பாக்கம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி 128வது வார்டு, இளங்கோ நகரில் ரூ.65.00இலட்சம் மதிப்பில் புதிய பல்நோக்கு கட்டிடம் மற்றும் முதல் தளத்தில் நவீன உடற்பயிற்சிக் கூடம், காவல் துறை சிறார் மற்றும் சிறுமியர் மன்றத்திற்கு கட்டிடம் கட்ட அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.

இவ்விழாவில் விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா, பகுதி கழக செயலாளரும், மாமன்ற உறுப்பினர்களாகிய மு. ராசா, கே. கண்ணன், மாவட்ட துணை செயலாளர் வாசுகி பாண்டியன், பொதுக்குழு உறுப்பினர்கள் துரைராஜ், தங்கராஜ், துரைப்பாக்கம் ஹரிகிருஷ்ணன், பகுதி கழக பொருளாளர் ரஞ்சித், பகுதி துணை செயலாளர் நாகராஜ், வட்ட கழக செயலாளர்கள் மு. கோவிந்தராஜ், வி.ஏ. ராஜா, மைக்கேல் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள், மகளிர் அணியினர், பொதுநல சங்கத்தினர் மற்றும் பெருநகர மாநகராட்சி உயர் அதிகாரிகள், காவல் துறை அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.